بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : மெல்போர்ன், ஆஸ்திரேலியா**

October 18 2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

# அல்லாஹ்வின் உண்மை அடியார்களின் நற்பண்புகள்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா பனீ இஸ்ராயீலின் 54வது வசனத்தை ஓதினார்கள்:**

وَقُلْ لِّعِبَادِیْ یَقُوْلُوا الَّتِیْ هِیَ اَحْسَنُ ؕ اِنَّ الشَّیْطٰنَ یَنْزَغُ بَیْنَهُمْ ؕ اِنَّ الشَّیْطٰنَ كَانَ لِلْاِنْسَانِ عَدُوًّا مُّبِیْنًا

இந்த வசனத்தின் பொருள்: *நீர் என்னுடைய அடியார்களிடம் அவர்கள் எல்லாவற்றையும் விட சிறந்த பேச்சைப் பேச வேண்டும் என்று கூறுவீராக! நிச்சயமாக சய்த்தான் அவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துகின்றான். நிச்சயமாக சய்த்தான் மனிதனின் பகிரங்கமான பகைவனாவான். (17:54)*

வசனத்தின் மொழியாக்கத்தை நீங்கள் கேட்டீர்கள். அல்லாஹ் தனது அடியாருக்கு இந்த தூதுச் செய்தியை வழங்கியுள்ளான். அதாவது அவர்கள் எல்லாவற்றையும் விட சிறந்ததைக் கூற வேண்டும் என்று கூறுகின்றான். இது முதல் விசயமாகும். அல்லாஹ்வின் பார்வையில் எது சிறந்ததாக இருக்கின்றதோ அதுதான் சிறந்த விசயமாகும். இதனாலேயே இறைவன் *இபாதீ - என்னுடைய அடியார்* என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளான். அதன் மூலம் யார் என்னுடைய அடியாராக இருக்கின்றார்களோ அல்லது என்னுடைய அடியாராக ஆக வேண்டும் என்ற தேட்டத்தில் இருக்கின்றாரோ அவர்களுக்கென்று எந்த விருப்பமும் இனி இல்லை. அவர்கள் தங்கள் விருப்பத்தைக் கைவிட்டு விட்டு எனது விருப்பத்தைத் தேட வேண்டும் என்பதை நாம் பேணி நடக்கும்படி செய்துள்ளான். அவர்கள் எனக்கு விருப்பமான நல்லவற்றைத் தேட வேண்டும். அதாவது இறைவனுக்கு பிரியமான நல்ல விசயங்களைத் தேட வேண்டும். இந்தக் கருத்தை மேலும் விளக்கியவாறு அல்லாஹ் சூரா அல் பக்கராவில் இவ்வாறு கூறுகின்றான்:

وَاِذَا سَاَلَكَ عِبَادِیْ عَنِّیْ فَاِنِّیْ قَرِیْبٌ ؕ اُجِیْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْیَسْتَجِیْبُوْا لِیْ وَلْیُؤْمِنُوْا بِیْ لَعَلَّهُمْ یَرْشُدُوْنَ

*தூதரே! என்னுடைய அடியார்கள் உன்னிடம் என்னைப் பற்றி கேட்டால் நான் அவர்களது அருகில் இருக்கின்றேன் என்று கூறுவீராக! துஆ செய்பவர் என்னை அழைக்கும் போது நான் அவரது துஆவை ஏற்றுக் கொள்கின்றேன். எனவே, துஆ செய்பவரும் எனது கட்டளையை ஏற்று நடக்க வேண்டும். மேலும் அவர் என் மீது ஈமான் கொள்ள வேண்டும். இதன் மூலம் அவர் நேர்வழியை அடைய முடியும். (2:157)*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் *இபாதீ - என்னுடைய அடியார்கள்* என்பதற்கு இவ்வாறு விளக்கம் கூறியுள்ளார்கள்:

எவர்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் ஈமான் கொள்கின்றார்களோ அவர்கள் என்னுடைய அடியார்கள் ஆவர். இறைவனுடைய அடியார்களில் ஒருவராக அவர்கள் இருப்பதன் காரணமாக இறைவனுக்கு அருகில் அவர்கள் இருக்கின்றனர். மேலும் எவர்கள் ஈமான் கொள்ளவில்லையோ அவர்கள் இறைவனை விட்டும் தொலைவில் இருக்கின்றனர். உண்மையான இறை அடியாராக ஆவதற்கு என்னுடைய ஒவ்வொரு கட்டளையையும் அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் தனது ஈமானை வலுப்படுத்த வேண்டும்

என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்த நிலை உருவாகும் போது இத்தகைய மக்கள் எல்லா விதமான நன்மைகளையும் பெறக்கூடியவர்களாக ஆகி விடுவர். அவர்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

எனவே, என்னுடைய அடியார் எனக்கு நல்லதாகத் தெரிகின்ற விசயத்தைத்தான் கூற வேண்டும். அதைத்தான் செய்யவும் வேண்டும் என்று இறைவன் கூறும்போது பிறகு நிச்சயமாக அத்தகைய அடியார்கள் தங்கள் ஈமானை வளர்ச்சி அடையும்படி செய்ய வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளைத் தேட வேண்டும். அல்லாஹ்வின் பார்வையில் நல்லதாகவும் சிறந்ததாகவும் அழகாகவும் இருக்கும் வகையில் அவர்கள் தமது செயல்களை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். நமது செயல் ஒன்றாகவும் நமது சொல் வேறொன்றாகவும் இருக்க முடியாது. நமது செயல்கள் இறைவனுடைய கட்டளைகளுக்கு மாற்றமானதாக இருந்து நாம் பிறருக்கு கூறும் அறிவுரை மட்டும் இறைவனுடைய கட்டளைகளுக்கேற்ப இருப்பது சரியல்ல. அவ்வாறு நமது சொல்லுக்கும் செயலுக்கும் இடையே முரண்பாடு இருந்தால் அத்தகைய செயல்களை இறைவன் பாவம் என்று கூறுகின்றான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لِمَ تَقُوْلُوْنَ مَا لَا تَفْعَلُوْنَ ۝

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்? (61:3)*

كَبُرَ مَقْتًا عِنْدَ اللّٰهِ اَنْ تَقُوْلُوْا مَا لَا تَفْعَلُوْنَ ۝

*நீங்கள் செய்யாததை நீங்கள் சொல்வது அல்லாஹ்வின் பார்வையில் மிகப்பெரும் பாவமாகும். (61:4)*

சொல்லுக்கும் செயலுக்கும் இடையே முரண்பாடு இருப்பது இறைவன் மிகவும் வெறுக்கின்ற ஒன்றாகும். இன்னும் சொல்வதென்றால் அது பாவமாகும். ஒருபுறம் ஈமான் கொண்டிருக்கின்றேன் என்ற வாதமும் மறுபுறம் இரட்டை வேடம் போடுவதும் ஆகிய இவை இரண்டும் ஒன்றுசேர முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் நான் கூறும் விசயத்தைக் கேளுங்கள். அதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உண்மையான உள்ளத்துடன் ஒரு மனிதனின் பேச்சு அமையவில்லையென்றால், மேலும் அதில் செயல் அளவிலான ஆற்றல் இல்லாவிட்டால் அது பிறரிடம் தாக்கத்தை ஏற்படுத்தாது.

அதாவது உண்மையான பேச்சைப் பேச வேண்டும். எதை அவர் பேசுகின்றாரோ அவரது செயலும் அதற்கேற்ப இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் பிறகு அதனால் எந்தப் பயனும் ஏற்படாது.

يَقُوْلُوا الَّتِيْ هِيَ اَحْسَنُ *சிறந்தவற்றைக் கூறுங்கள்* என்பதன் கருத்து, ஒரு அடியானின் விளக்கத்திற்கேற்ப சிறந்ததாக இருக்கும் விசயத்தைக் கூற வேண்டும் என்பதல்ல. மாறாக அல்லாஹ் கூறும் விளக்கத்திற்கேற்ப அது சிறந்ததாக இருக்க வேண்டும். அது நன்மைகளைப் பரப்பக்கூடியதாகவும் தீமைகளைத் தடுக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பும் விளக்கத்தைக் கூறிவிட்டு தனது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடு இல்லை என்றும் எனவே அவர் மூஃமின் ஆகி விட்டார் என்றும் கூறிவிட முடியாது. ஒரு குடிகாரன் நான் குடிக்கின்றேன். எனவே, நீங்களும் குடியுங்கள். ஏனென்றால், நான் எதை சொல்கின்றேனோ அதைத்தான் செய்கின்றேன் என்று கூற முடியாது. இது நன்மை ஆகாது. இது சிறந்த விசயமும் அல்ல. மாறாக இது பாவமாகும்.

இங்கு இந்த சமுதாயத்தில் நாம் பார்க்கின்றோம். சுதந்திரம் என்ற பெயரில் எவ்வளவு வெட்கங்கெட்ட செயல்கள் நடக்கின்றன? அவை வெளிப்படையாகச் செய்யப்படுகின்றன. டி.வி.யிலும் இன்டர்நெட்டிலும் பத்திரிகைகளிலும் இந்த வெட்கங்கெட்ட செயல்கள் தொடர்பான விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. Fashion Show மற்றும் Dress Show என்ற பெயரில் நிர்வாண ஆடைகள் காட்டப்படுகின்றன. நிச்சயமாக இப்படிப்பட்டவர்களது சொல்லும் செயலும் ஒன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் இறைவன் பார்வையில் இது வெறுக்கத்தக்கதும் பாவமுமாகும். இவை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாற்றமான செயல்களாகும். சில மக்கள், சில இளைஞர்கள் இப்படிப்பட்ட மக்களின் செயல்களின் தாக்கத்திற்கு ஆளாகி விடுகின்றனர். இவர் மிகவும் தெளிவான மனிதராக இருக்கின்றார். இவரது வெளித் தோற்றத்தில் என்ன இருக்கின்றதோ அதுதான் இவரது உள்ளத்திலும் இருக்கின்றது. இவரிடம் இரட்டை வேடம் இல்லை என்று இவர்களைப் பற்றி அவர்கள் கருதுகின்றார்கள்.

அப்படிப்பட்டவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு இரட்டை வேடம் போடாமல் இருப்பது ஒன்றும் நன்மையல்ல. மாறாக அது வெட்கங்கெட்ட செயல்களை விளம்பரப்படுத்துவதாகும். அது அல்லாஹ்வை விட்டு

அவர்களை தொலைவில் கொண்டு சென்று விடும். எனவே இந்த சமுதாயத்தில் வாழ்கின்ற இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் ஆகியோர் இத்தகைய சுற்றுச்சூழலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு எப்போதும் அவனிடம் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ***என்னை நேரான வழியில் நடத்துவாயாக!*** என்று துஆ செய்ய வேண்டும். சய்த்தானிடமிருந்து தப்பிப்பதற்காக செய்ய வேண்டும். அல்லாஹ் தனது கட்டளைக்கேற்ப நம்பிக்கையாளர்களிடம் சில எதிர்பார்ப்புகளை வைத்திருக்கின்றான். அவற்றை நாம் தேட வேண்டும். அந்த சிறந்த விசயங்களைத் தேடுவதற்கு பெருமுயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் தனது அடியார்களுக்கு கருணை காட்டுவதுடன் தனது நெருக்கத்திற்கான அடையாளத்தை அவர்களுக்கு காட்டும் வகையில் உள்ள சிறந்த விசயங்களை நாம் தேட வேண்டும். அதன் முலம் அல்லாஹ் தனது திருப்தியைப் பெறுவதற்கான வழிமுறைகளை அவர்களுக்கு புரிய வைக்கின்றான். அடியார்கள் செய்துள்ள நன்மைகளைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து அவர்களது சொல்லிலும் செயலிலும் உள்ள இணக்கத்தைக் கண்டு தனது அடியார்களை அவர்கள் நற்கூலி பெறத் தகுதி உடையவர்களாக ஆக்கி விடுகின்றான். இந்த விசயங்களைத் தேடுதவற்காக ஓர் அடியான் அல்லாஹ்வின் கட்டளைகளைத் தேட வேண்டும். அதன் மூலம் சிறந்தவை, சிறந்தவை அல்லாதவை ஆகியவற்றிற்கு இடையிலுள்ள வித்தியாசம் அவருக்கு தெரிய வேண்டும். அதன் உண்மை அவருக்கு தெரிய வேண்டும். மேலும் என்னுடைய அடியார்கள் என்று எவர்களை அல்லாஹ் அழைத்துள்ளானோ அவர்களில் ஒருவராக அவர் ஆக வேண்டும். அல்லாஹ் அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான நற்செய்தியை வழங்குகின்றான்.

அஹ்மதிகளாகிய நம்மீது இக்காலத்தில் இந்த பெரிய பொறுப்பு இருக்கின்றது. ஏனென்றால் நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். நமது சொல்லையும் செயலையும் ஒன்றுபோல் வைத்திருப்போம் என்று நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். அதற்காக அல்லாஹ்வின் பார்வையில் சிறந்ததாக இருக்கக்கூடிய ஒவ்வொரு பணியையும் நாம் செய்வோம். அதற்காக முயற்சிகளைச் செய்வோம். எங்களது சொல்லிலும் செயலிலும் ஒருமித்த நிலை இருக்கும். அல்லாஹ் கூறியுள்ள சிறந்த விசயங்களைச் செய்வதற்காக நாம் திருக்குர்ஆன் பக்கம் திரும்புவோம் என்று நாம் உடன்படிக்கை செய்துள்ளோம்.

திருக்குர்ஆனில் இவ்வாறான நூற்றுக்கணக்கான கட்டளைகள் உள்ளன. சிறந்தவை மற்றும் சிறந்தவை அல்லாதவை ஆகியவற்றிற்கு இடையிலுள்ள வேறுபாடு தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. இவற்றை செய்தால் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக்கூடிய வழிகளைப் பெறக்கூடியவர்களாக நீங்கள் ஆகிவிடுவீர்கள். இவற்றை செய்தால் அல்லாஹ்வின் வெறுப்பிற்கு காரணமாக ஆகிவிடுவீர்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இப்போது இப்படிப்பட்ட சில விசயங்களை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

**உதாரணமாக, அல்லாஹ் முஸ்லிம்களைப் பார்த்து கூறுகின்றான்.**

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ
الْمُنْكَرِ وَتُؤْمِنُونَ بِاللَّهِ

***அதாவது மக்களின் பயனுக்காக உருவாக்கப்பட்டுள்ள நீங்கள் எல்லாரையும் விட மிக சிறந்த கூட்டத்தினராவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள். மேலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். (3:111)***

அல்லாஹ் தனது அடியார்கள் அல்லது ரஹ்மானின் அடியார்கள் என்ற தகுதியைப் பெறுகின்றன கூட்டத்தினரை எல்லா மனிதர்களை விடவும் சிறந்த கூட்டத்தினர் என்று கூறியுள்ளான். அவர்கள் ஏன் சிறந்தவர்களாக இருக்கின்றனர்? ஏனென்றால் அவர்கள் அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைக்கேற்ப சிறந்தவற்றை தங்களது சொல்லிலும் செயலிலும் நிலைநாட்டியுள்ளனர். அவர்கள் ஏன் சிறந்தவர்கள் என்றால் அவர்கள் நன்மைக்கான வழியைக் காட்டுகின்றனர். மன விருப்பங்களுக்குப் பின்னால் செல்வதற்குப் பகரமாக இறைவன் தனது நெருக்கத்தை வழங்குவதற்காகத் தந்துள்ள அந்த நேர்வழி பற்றி அவர்கள் போதிக்கின்றனர்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் சிறந்த கூட்டத்தினராக இருப்பதற்கான இன்னொரு காரணம் நீங்கள் தீமைகளிலிருந்து தடுக்கின்றீர்கள். ஒவ்வொரு தீமையிலிருந்தும் பாவத்திலிருந்தும் நீங்களும் உங்களை தடுத்துக் கொள்கின்றீர்கள். பிறரையும் அந்த தீமையிலிருந்து அவர்கள் தங்களை தடுத்துக் கொள்ள வேண்டும் என்று போதனை செய்கின்றீர்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் வெறுப்பிலிருந்தும் நீங்கள் தப்பித்து விடலாம். பிறகு அல்லாஹ்வின் மீது உங்களுக்குள்ள நம்பிக்கை வலுவானதாக இருக்கின்றது. இதனாலேயே நீங்கள் சிறந்த கூட்டத்தினராவீர்கள். இறைவன் என்னுடைய ஒவ்வொரு சொல்லையும் செயலையும் பார்க்கின்றான் என்ற நம்பிக்கையில் நீங்கள் நிலைத்திருக்கின்றீர்கள். உலகின் தற்காலிக ரப்புகள் எனது தேவைகளை நிறைவு செய்யவில்லை. மாறாக, எல்லா

உலகங்களுக்கும் ரப் ஆக இருக்கின்ற இறைவனே எனது தேவைகளை நிறைவு செய்பவனாக இருக்கின்றான். அவன் எனது துஆக்களைக் கேட்பவனாவான் என்ற நம்பிக்கையில் நீங்கள் நிலைத்திருக்கின்றீர்கள்.

பிறகு இந்த விசயம் எப்படிப்பட்டதென்றால் இதனை நாம் உலகிற்கு எடுத்துக் கூற வேண்டியதுள்ளது. அதாவது நீங்கள் எஞ்சியிருப்பது கூட இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது அவனது கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டு அக்கட்டளைகளை நிறைவேற்றுவதில் தான் இருக்கின்றது. அவை உலக சுக போகங்களிலும் இன்பங்களிலும் இல்லை.

பிறகு அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த சிறந்த விசயங்கள், நன்மைகள், தீமைகள் ஆகியவற்றைப் பற்றி மேலும் பல விபரங்களைக் கூறியுள்ளான். உதாரணமாக அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِينَ لَا يَشْهَدُونَ الزُّورَ وَإِذَا مَرُّوا بِاللَّغْوِ مَرُّوا كِرَامًا

*அல்லாஹ்வின் அத்தகைய அடியார்கள் பொய் சாட்சி கூறமாட்டார்கள். மேலும் வீணானவற்றைக் கடந்து செல்லும் போது அதில் கலந்து கொள்ளாமல் கண்ணியமாக அவற்றை கடந்து சென்று விடுவர். (25:73)*

இங்கு இரண்டு விசயங்களிலிருந்து தடை செய்யப்பட்டிருக்கின்றது. ஒன்று பொய்யிலிருந்து தடை செய்யப்பட்டிருக்கின்றது. மற்றொன்று வீணான விசயங்களிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது. அதாவது பொய் சாட்சி கூறக்கூடாது. எத்தகைய சந்தர்ப்பத்திலும் பொய் சாட்சி கூறக்கூடாது.

**இன்னும் சொல்வதென்றால் பிறிதோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

உங்களது சாட்சி கூறும் தரம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்றால் உங்களுக்கு எதிராகவோ அல்லது உங்களது பெற்றோருக்கு எதிராகவோ அல்லது உங்களுக்கு பிரியமான உறவினர்களுக்கு எதிராகவோ சாட்சி கூற வேண்டியது வந்தாலும் நீங்கள் சாட்சி கூற வேண்டும்.

உண்மையை நிலைநாட்டுவதற்கான தரம் இதுவேயாகும். இந்த தரத்தை நிலைநாட்டினால் தான் அல்லாஹ் எவற்றை சிறந்த விசயங்கள் என்று கூறுகின்றானோ அந்த சிறந்த விசயங்களாக இவை கணக்கிடப்படும். இதன் விளைவாக மனிதன் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவனாக ஆகி விடுகின்றான். நன்மைகளில் மேலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது. அல்லாஹ்வின் உண்மையான அடியார்களில் ஒருவராக அவர் ஆகி விடுகின்றான்.

**பிறகு அல்லாஹ் உண்மை தொடர்பாக மேலும் கூறுகின்றான்:**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا

*நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் கோணல் தன்மை இல்லாத கூற்றுக்களைக் கூறுங்கள். இன்னும் சொல்வதென்றால் அது உண்மையான, தெளிவான, நேரிய கூற்றாக இருக்க வேண்டும். (33:71)*

இத்தகைய உண்மையின் தரத்தை நிலைநாட்டுவதுதான் சிறந்த விசயமாகும். அதை செய்யும்படியும் அதை பரப்பும்படியும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். ஆனால் நாம் நம்மை ஆய்வு செய்து பார்த்தால் நம்மிடம் உண்மையின் அந்த தரம் தென்படவில்லை. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் நமது மன விருப்பங்கள் அங்கு நிற்கின்றன. நாம் ஆய்வு செய்து பார்த்தால் நம்மில் எத்தனை பேர் தேவைப்படும் போது நமக்கு எதிராகவே உண்மையான சாட்சி கூறத் தயாராக இருக்கின்றோம்? நம்மில் எத்தனை பேர் நமது பெற்றோருக்கு எதிராக உண்மையான சாட்சி கூறுவோம்? நமது பிரியமானவர்களுக்கு எதிராக உண்மையான சாட்சி கூறுவோம்?

பிறகு இந்த தரத்தையும் நிலைநாட்ட வேண்டும். தினந்தோறும் நாம் பேசும் பேச்சு, வியாபார விசயங்கள் போன்ற ஒவ்வொரு விவகாரங்களிலும் கோணலான விசயங்களைப் பேசுவதிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும். எங்காவது சில இடங்களில் சுயநலம் இடையில் வந்து விடுகின்றது. அல்லது தனக்கு நெருக்கமானவர்களது பலன்கள் தடைகற்களாக வந்து விடுகின்றன. அல்லது தற்பெருமை வந்து விடுகின்றது. தவறை ஏற்றுக் கொள்ள எவரும் தயாராக இருப்பதில்லை. இவ்வாறு விசயங்களைக் கோணலான விசயங்களாக ஆக்குவதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. அதன் மூலம் அவர்கள் பிரச்சனைகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்கின்றனர். அதன் மூலம் அவர்கள் தமது சுய பயன்களைப் பெறுகின்றனர்.

கவ்லே ஸதீது என்னும் நேரிய கூற்றைக் கூறுவதில் உயர்ந்த தரத்தை அடைவது அல்லாஹ் கூறியுள்ள சிறந்த விசயங்களில் ஒன்றாகும். அல்லது எவ்வித கோணலுமின்றி உண்மையைத் தெளிவாகக் கூறுவதுதான் அல்லாஹ்விடத்தில் சிறந்தவையாகும் என்றும் இதனை நாம் கூற வேண்டும்.

இந்தக் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டால் நமது வீட்டில் நடைபெறும் சண்டைகளிலிருந்து மற்ற சமுதாய அளவிலான சண்டைகள் வரை ஒவ்வொன்றுக்கும் முடிவு வந்து விடும். நாம் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமும் இருக்காது. ஜமாஅத்தின் கஸா அதாவது நீதித்துறையிடம் செல்ல வேண்டிய தேவையும் நமக்கு இருக்காது. சமாதானம் மற்றும் அமைதியின் சூழல் எல்லா தரப்பிலும் நிலைநாட்டப்பட்டு விடும். அடுத்த தலைமுறையிலும் கூட உண்மையின் தரம் உயர்ந்து விடும். பிறகு உண்மையின் உயர்வான தரத்தை அடைய வேண்டும் என்ற போதனையுடன் மேலும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள விசயம் என்னவென்றால் எந்த சபைகளில் உண்மையான விசயங்கள் பேசப்படுவதில்லையோ, மேலும் அதில் தரக்குறைவான வீணான விசயங்கள் பேசப்படுகின்றதோ அத்தகைய சபைகளிலிருந்து உடனடியாக எழுந்து சென்று விட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எங்கு இறைவனின் போதனைகளுக்கு மாற்றமான விசயங்கள் பேசப்படுகிறதோ அந்த சபைகளில் நீங்கள் செல்லக் கூடாது.

இந்தக் காலத்தில் இத்தகைய தரக்குறைவான வீணான விசயங்கள் சில நேரங்களில் நாம் உணராத நிலையிலேயே நம் வீடுகளில் கூடும் சபைகளில் அல்லது நாம் அமர்ந்துள்ள சபைகளில் பேசப்படுகிறது. ஜமாஅத் அமைப்பிற்கு எதிரான விசயங்கள் அவற்றில் பேசப்படுகிறது. ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு எதிரான விசயங்கள் பேசப்படுகிறது. இதுபற்றி பலமுறை நான் கூறியுள்ளேன். அதாவது கீழ் மட்டத்தில் சீர்திருத்தம் ஏற்படாத நிலையில் பொறுப்பாளர்களுக்கு எதிராக ஏதாவது விசயங்கள் கூற வேண்டியது இருந்தால் அவற்றை எனக்கு எட்ட வையுங்கள். ஆனால் சபைகளில் அமர்ந்து இவற்றைப் பேசினால் அவை வீணான விசயங்களாக ஆகி விடும். அதனால் சீர்திருத்தம் ஏற்படாது. மாறாக அதனால் மேலும் குழப்பமும், சீர்கேடும், சண்டைகளும் தான் ஏற்படும்.

பிறகு இந்தக் காலத்தில் டி.வி.யில் மோசமான படங்கள் வருகின்றன. இன்டர்நெட்டிலும் மிகவும் மோசமான தரக்குறைவான படங்கள் வருகின்றன. ஆடலும் பாடலும் இருக்கின்றன. எப்படிப்பட்ட பாடல்கள் வருகின்றன என்றால் அவற்றில் தேவிகள் மற்றும் தேவதைகளின் பெயரில் உதவி கேட்கின்றனர். சில இந்தியப் படங்களில் இவ்வாறு வருகின்றன. அல்லது அவற்றில் அந்த தேவதைகளின் பெருமை எடுத்துக் கூறப்படுகிறது. இதனால் ஏகனான எல்லாரையும் விட பெரிய சக்தியுள்ள இறைவன் மறுக்கப்படுகின்றான். அல்லது தேவதைகள் மற்றும் சிலைகள் இறைவன் வரை நம்மை கொண்டு செல்வதற்கான வழியாக இருக்கின்றது என்பது அதில் வெளிப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. எனவே இவை வீணான விசயங்களாகும். இறைவனுக்கு இணை வைக்கும் செயலாகும். இறைவனுக்கு இணை வைத்தலும் பொய்யும் ஒன்றேயாகும். அப்படிப்பட்ட பாடல்களையும் கேட்கக் கூடாது.

பிறகு Facebook இருக்கின்றது. அல்லது Twitter இருக்கின்றது. அல்லது கம்பியூட்டரில் சாட்டிங் போன்றவை இருக்கின்றது. இதிலும் சபைகள் கூட்டப்படுகிறது. அதில் சில சமயங்களில் எத்தகைய வீணான அசிங்கமான விசயங்கள் பேசப்படுகின்றன என்றால் இதனால் மற்ற பிரிவினருடன் சண்டை ஏற்படும் போது சில இளைஞர்கள் அங்கு என்னென்ன விசயங்கள் பேசப்பட்டன என்பதை எனக்கு அனுப்புகின்றனர். முதலில் இந்த இளைஞர்கள் தாமே அவற்றில் கலந்து கொள்கின்றனர். அதில் எத்தகைய விசயங்கள் பேசப்படுகின்றன என்றால் நல்லியல்புள்ள ஒரு மனிதரால் அவற்றைக் கேட்கவே முடியாது. பெரிய பெரிய நல்ல குடும்பங்களைச் சேர்ந்த ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் இதில் கலந்து கொள்கின்றனர். தங்களது நிர்வாணத்தை அவர்கள் அதில் வெளிப்படுத்துகின்றனர். ஓர் அஹ்மதி இப்படிப்பட்ட விசயங்களிலிருந்து தவிர்ந்திருப்பது மிகவும் அவசியமானதாகும். ஓர் அஹ்மதி முஸ்லிமுக்கு நீங்கள் சிறந்த கூற்றுக்களைத் தேட வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. நன்மைகளில் நம்மை முன்னேற வைக்கின்ற இந்த விசயங்களை நாம் தேட வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் சிறப்பான அடியாராக நீங்கள் ஆக வேண்டும். அதன் மூலம் எந்த தீய மக்கள் மீது சாபம் விழ இருந்ததோ அதிலிருந்தும் நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம்.

எவ்வாறிப்பினும், பல சிறந்த கூற்றுக்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி இறைவன் நமக்கு எடுத்துக் கூறியுள்ளான். நன்மையின் வழிகளைப் பின்பற்றிச் செல்வதும் அதைப் பற்றி பிறருக்கு கூறுவதும் சிறந்த விசயமாகும். தீமைகளிலிருந்து பிறரைத் தடுப்பதும் தானும் அவற்றிலிருந்து விலகியிருப்பதும் சிறந்த விசயமாகும். அல்லாஹ் ஒரு நம்பிக்கையாளரிடத்தில் – ஓர் உண்மையான இறை அடியாரிடத்தில் உங்களது கூற்றுக்கள் மிகவும் சிறந்தவையாக இருக்க வேண்டும் என்றே கூறுகின்றான்.

**ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

وَلِكُلٍّ وِّجْهَةٌ هُوَ مُوَلِّيْهَا فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ

*ஒவ்வொரு நபருக்கும் ஒரு குறிக்கோள் இருக்கின்றது. அதை அடைவதற்காக அவர் அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றனர். (2.149)*

உங்களது குறிக்கோள் எதுவாக இருக்க வேண்டும் என்றால் நீங்கள் நன்மைகளில் முன்னேறிச் செல்ல முயற்சிகளைச் செய்ய வேண்டும். நன்மைகளில் முன்னேறிச் செல்வதற்கான முயற்சி செய்யும் போது அதனால் சொல், செயல் ஆகிய இரண்டுமே சிறந்தவையாக இருக்கும். அவை இறைவன் விரும்புவதற்கேற்ப இருக்கும். நன்மைகளில் முன்னேறிச் செல்வதற்கான முயற்சிகளைச் செய்யும் போது பிறகு நிச்சயமாக சய்த்தானிடமிருந்தும் அவனது தாக்குதல்களிலிருந்தும் தப்பிப்பதற்கான முயற்சிகளும் இருக்கும்.

**நான் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

إِنَّ الشَّيْطٰنَ يَنْزَغُ بَيْنَهُمْ

*நிச்சயமாக சய்த்தான் அவர்களிடையே அதாவது மனிதர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துகின்றான். (17:54)*

சய்த்தான் என்ற சொல்லுக்கு பல பொருள்கள் உள்ளன. நம்மில் பெரும்பாலார் அதைப் பற்றி அறிவோம். ரஹ்மானாகிய இறைவனின் ஒவ்வொரு கட்டளைக்கும் எதிரான விசயங்களைக் கூறுபவன் சய்த்தான் ஆவான். ஆணவம், கிளர்ச்சி, இழப்பு ஆகியவற்றை அவன் ஏற்படுத்துகின்றான். இவற்றின் பக்கம் மக்களை திருப்பக் கூடியவனாக அவன் இருக்கின்றான். பொறாமையின் நெருப்பில் எறியக்கூடியவனாக அவன் இருக்கின்றான். இழப்பை ஏற்படுத்தக் கூடியவனாகவும் உள்ளங்களில் சலனங்களை ஏற்படுத்தக் கூடியவனாகவும் அவன் இருக்கின்றான்.

சுருக்கமாக, எந்த விசயங்கள் சிறந்தவையாக இருக்கின்றதோ மேலும் அவற்றை செய்யும்படி இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அவற்றை செய்வதன் மூலம் அல்லாஹ்விற்குரிய உரிமைகளும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளும் செலுத்தப்படுகின்றன. சய்த்தான் அவற்றிற்கு நேர் மாற்றமான கட்டளைகளை இடுகின்றான். ***அன் னஸகு***(G) மற்றும் ***னஸக***(G) என்பதன் பொருள் சய்த்தான் கூறும் விசயங்களாகும். அல்லது இதன் இன்னொரு பொருள் ஆலோசனையாகும். அந்த ஆலோசனையின் நோக்கம் மக்களில் ஒருவரை மற்றவருக்கு எதிராகத் தூண்டுவதாகும். மேலும் அதனால் குழப்பத்தை ஏற்படுத்துவதாகும். எனவே அல்லாஹ் கூறுகின்றான்:

சய்த்தான் மனிதனுக்கு عَدُوًّا مُّبِيْنًا அதாவது பகிரங்க எதிரியாக இருக்கின்றான். நீங்கள் என்னுடைய அடியாராகி அந்த எல்லா சிறந்த விசயங்களையும் சொல்லாமலும் செய்யாமலும் இருந்தால் அவற்றிற்கேற்ப செயல்படாமல் இருந்தால் ரஹ்மானாகிய இறைவனின் அடியாராக இருப்பதிலிருந்து விலகி சய்த்தானின் மடியில் விழுந்து விடுவீர்கள். சய்த்தான் உங்களிடத்தில் பொய்யையும் உருவாக்குவான். தற்பெருமையையும் உருவாக்குவான். கிளர்ச்சி செய்வதையும் உருவாக்குவான். மற்றவர்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதன் பக்கம் உங்கள் கவனத்தை திருப்புவான். உள்ளங்களில் சந்தேகங்களை ஏற்படுத்துவான். பொறாமையின் நெருப்பில் எரியும்படி உங்களை செய்வான்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நீங்கள் இரவில் தூங்கும் போது திருக்குர்ஆனின் இறுதி இரண்டு சூராக்களை சூரத்துல் பலக் மற்றும் சூரா அந்நாஸ் ஆகியவற்றை மூன்று முறை ஓதி உங்கள் மீது ஊதிக் கொள்ளுங்கள். அதன் மூலம் சய்த்தானிய எண்ணங்கள், சந்தேகங்கள், தீமைகள் ஆகியவற்றிலிருந்து நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள் என்று கூறினார்கள்.

இதன் பக்கம் உங்களது கவனம் இருக்க வேண்டும். இந்த சூராக்களை ஓதிவிட்டு இத்தகைய தீங்குகளிலிருந்து நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இவற்றிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாக வைப்பாயாக! என்று அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும். எனவே சிறந்த விசயங்களில் ஈடுபடுவதும் நன்மைகளில் முன்னேறுவதும் சய்த்தானிடமிருந்து தப்பிக்கும் நிலையும் எப்போது அல்லாஹ்வின் உதவி நம்முடன் இருக்குமோ அப்போதே ஏற்படும். அவனிடம் துஆவுடன் நேர்வழியை வேண்டியவாறு அவனது கட்டளைகளைத் தேடுவதுடன் சய்த்தானிடமிருந்து தப்பிப்பதற்கான முயற்சி செய்யும் போது தான் ஏற்படும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சய்த்தான் மனிதனை வழிகெடுப்பதற்காகவும், அவனது செயல்களை குழப்பமாக ஆக்குவதற்காகவும் எப்போதும் தயாராக இருக்கின்றான். எதுவரையென்றால் நன்மையான காரியங்களில் கூட மனிதனை வழிகெடுக்க விரும்புகின்றான். ஏதாவதொரு வகையிலான குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு திட்டங்களைத் தீட்டுகின்றான். தொழும்போது அதிலும் கூட வெளிவேசம், பகட்டு போன்றவற்றை சேர்த்து விட விரும்புகின்றான். அதாவது தொழுபவரது உள்ளத்தில் இத்தகைய எண்ணங்களை ஏற்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்த விரும்புகின்றான். இமாமத் செய்பவரைக் கூட இப்படிப்பட்ட துன்பத்தில் ஆழ்த்த அவன் விரும்புகின்றான். எனவே அவனது தாக்குதல்களிலிருந்து ஒருபோதும்

அச்சமற்ற நிலையில் நாம் இருந்து விடக் கூடாது. ஏனென்றால் இவனது தாக்குதல் குழப்பவாதிகள் மற்றும் தீயவர்கள் மீது பகிரங்கமாக நடக்கின்றது. அவர்கள் இவனது இரையாக இருக்கின்றனர். ஆனால் தூயவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கும் அவன் தயங்குவதில்லை. ஏதாவதொரு வகையில் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றான். எந்த மக்கள் இறைவனின் அருளின் கீழ் இருக்கின்றனரோ, சய்த்தானின் நுட்பத்திலும் நுட்பமான தீங்குகள் பற்றி தெரிந்தவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் அதிலிருந்தும் தப்பிப்பதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்கின்றனர். ஆனால் எவர்கள் பக்குவம் அடையாமலும் பலவீனமானவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்கள் சில நேரங்களில் இத்தகு துன்பங்களில் ஆழ்ந்து விடுகின்றனர். மலாமதி என்று ஒரு பிரிவு உள்ளது. அவர்கள் தங்கள் நன்மைகளை மறைக்கின்றனர். தங்களது தீமைகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றனர்.

ஒரு பிரிவு இப்படியும் இருக்கின்றது. அவர்கள் உங்கள் நன்மைகளை மறைக்க வேண்டும். உங்களது தீமைகளை வெளிப்படுத்துங்கள் என்று கூறுகின்றனர். அதனால் இவர் மிகவும் நல்லவர் என்று எவரும் கூறிவிடக் கூடாது என்கின்றனர். இவ்வாறு நாம் சய்த்தானின் தீங்குகளிலிருந்து தப்பித்து விடலாம் என்று நினைக்கின்றனர். ஆனால் எனது பார்வையில் அவர்களும் முழுமை அடைந்தவர்கள் அல்ல. ஏனென்றால் அவர்களது உள்ளத்திலும் (அல்லாஹ் அல்லாத) மற்றவர்களே உள்ளனர். அவ்வாறு மற்றவர்கள் இல்லையென்றால் அவர்கள் ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டார்கள். மனிதன் இறைஞானத்திலும் இறைவனை அடையும் வழியிலும் எவ்வகையிலும் மற்றவர்கள் அவனது உள்ளத்தில் இல்லாமல் இருக்கும் போதுதான் முழுமையான நிலையை அடைகின்றான். இப்படிப்பட்ட பிரிவினர் நபிமார்களது பிரிவினர்களாகத்தான் இருக்கின்றனர். இவர்கள் எப்படிப்பட்ட முழுமை பெற்ற மனிதர்களாக இருக்கின்றனர் என்றால் இவர்களது உள்ளத்தில் மற்றவர்களது இருப்பு முற்றிலும் அழிந்து விடுகிறது.

எவ்வாறிருப்பினும், நபிமார்களுக்கு தான் இப்படிப்பட்ட தகுதி கிடைக்கும். அவர்களைத் தவிர வேறு எவருக்கும் இந்த தகுதி கிடைக்காது. எனவே முயற்சி செய்ய வேண்டிய தேவை இல்லை என்று எவரும் கருதிவிடக் கூடாது. பல சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீங்கள் உங்களது தரத்தை உயர்த்த முயற்சி செய்து கொண்டே செல்லுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இறை நேசர்களாக மாறுங்கள். இறை நேசர்களை வணங்குபவர்களாக மாறாதீர்கள்.

பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரியை எடுத்துக் கூறியவாறு, இவர் உங்களுக்கு அழகிய முன்மாதிரியாவார். அந்த முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க முயற்சி செய்யுங்கள் என்று கூறுகின்றான். எனவே சய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கு முழுமையான முயற்சி செய்யுங்கள். இதற்காக அல்லாஹ் கூறியிருப்பது போன்று சிறந்த கூற்றைக் கூறுவது அவசியமானதாகும். ஒவ்வொரு விவகாரத்திலும் அல்லாஹ்வின் கட்டளைகளின் பக்கம் பார்ப்பது அவசியமானதாகும். பிறகு துஆவும் அல்லாஹ் கற்றுத் தந்துள்ளான். திருக்குர்ஆனின் இறுதி இரண்டு சூராக்களில் சய்த்தானின் எல்லா விதமான தாக்குதல்களிலிருந்தும் தப்பிப்பதற்கான துஆ இருக்கின்றது.

**பிறகு அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:**

وَإِمَّا يَنْزَغَنَّكَ مِنَ الشَّيْطَانِ نَزْغٌ فَاسْتَعِذْ بِاللَّهِ إِنَّهُ سَمِيعٌ عَلِيمٌ

*உங்களுக்கு சய்த்தானிடமிருந்து வழிகெடுக்கக்கூடிய ஒரு விசயம் வந்தால், சிறந்த கூற்றுக்கு மாற்றமான விசயத்தை சய்த்தான் உங்களுக்கு எட்ட வைத்தால் நீங்கள் அல்லாஹ்விடத்தில் அடைக்கலத்தைத் தேடுங்கள். (7:201)*

அவூதுபில்லாஹி மினஷ் சய்த்தானிர் ரஜீம் என்று ஓதுங்கள். லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ் என்று ஓதுங்கள். அல்லாஹ் நான் கேட்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றேன் என்று கூறி நமக்கு நம்பிக்கை ஊட்டுகின்றான். நல்லெண்ணத்துடன் துஆக்கள் செய்யப்பட்டிருந்தால் நிச்சயமாக அவன் அவற்றை கேட்கின்றான். இங்கு இந்த விசயத்தை நான் தெளிவாகக் கூறுகின்றேன். சய்த்தான் பொறாமையின் நெருப்பில் தானும் எரிந்து ஆதமை மறுத்து அந்த இடத்திலிருந்து வெளியேற்றி விட்டான். பிறகு மனிதர்களை இந்த நெருப்பில் எரிய வைப்பதற்காக அவன் உடன்படிக்கையும் செய்து கொண்டான். இது மிகவும் அபாயகரமான விசயமாகும். இந்த பொறாமையின் நெருப்பு தான் சமுதாயத்தின் அமைதியின்மைக்குக் காரணமாக இருக்கின்றது. எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இதிலிருந்து மிகவும் அதிகமாக விலகியிருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக இதிலிருந்து தப்பிப்பதற்கு மிகவும் அதிகமாக மன்றாடி துஆ செய்ய வேண்டும்.

சய்த்தானின் தாக்குதல் இருவிதமாக இருக்கும். ஒருபுறம் இறைவனோடு உள்ள உறவை முறிப்பதற்கும் அதனை துண்டிப்பதற்கும் தாக்குதல் நடத்துகின்றான். மறுபுறம் ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதனுடன் உள்ள தொடர்பை துண்டிப்பதற்கும் அவன் முயற்சி செய்கின்றான். ஆனால் சிறந்த கூற்று அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் பக்கம் மனிதனை கொண்டு செல்கிறது. மேலும் இறைவனுக்காக ஒரு மனிதன் மற்ற மனிதனை நேசிக்கும்படி அது செய்கிறது.

நான் ஏற்கனவே கூறியது போன்று இறைவனுக்கும் படைப்பினங்ளுக்கும் செலுத்த வேண்டிய உரிமைகளைச் சிறந்த கூற்றின் மூலமே நாம் செலுத்த முடியும். எல்லாரிடத்தும் அன்பு எவரிடத்தும் பகையில்லை என்று நாம் எழுப்புகின்ற முழக்கத்தைக் கேட்டு அந்நியர்கள் கூட சிறந்த தாக்கத்திற்கு ஆளாகின்றனர். நமது சபைகளில் அவர்கள் வரும் போது இதுபற்றி குறிப்பிடாமல் அவர்களால் இருக்க முடியாது.

ஆனால் நாம் நம்மிடையே ஒருவர் மற்றவரிடம் இதனை வெளிப்படுத்திக் காட்டாமல் இருந்தால் இந்த முழக்கம் பலனற்றதாகும். இது அல்லாஹ்வின் கட்டளையாகும். இதனை நான் மீண்டும் மீண்டும் ஜமாஅத்திற்கு எடுத்துக் கூறியுள்ளேன்.

**இறைவன் கூறுகின்றான்:**

(48:30) رُحَمَآءُ بَيۡنَهُمۡ உங்களில் ஒருவர் மற்றவரிடம் மிகவும் கருணையுடனும் பரிவுடனும் நடந்து கொள்ளுங்கள். அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்ளுங்கள். அப்படிப்பட்டவர்களே சரியான நம்பிக்கையாளர்களாக இருக்கின்றனர். இது நம்பிக்கையாளரின் அடையாளமாகும். பெரிய பெரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தி எல்லாரிடத்தும் அன்பு எவரிடத்தும் பகையில்லை என்பது எங்களது முழக்கமாகும் என்பதை நாம் நிரூபிக்க எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், பிறகு ஜமாஅத் ஒற்றுமைக்கு ஒரு ஈடிணையற்ற முன்மாதிரியாக இருக்கின்றது என்று கூறினாலும் நாம் எவ்வளவு முயற்சி செய்கின்றோமோ அதன் உண்மையான தாக்கம் நாம் நம்முடைய வீட்டிலும் நமது சுற்றுப்புறத்திலும் இந்த சூழலை ஏற்படுத்தும் போதுதான் ஏற்படும். அதாவது நம்மில் ஒருவர் மற்றவருடன் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருடன் மன்னிக்கும் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். இதுவும் எப்படிப்பட்ட நன்மை என்றால் இது பற்றியும் அல்லாஹ் குறிப்பாக போதனை செய்துள்ளான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَلۡيَعۡفُوۡا وَلۡيَصۡفَحُوۡا *மன்னியுங்கள். கண்டும் காணாதது போன்று நடந்து கொள்ளுங்கள். (24:23)*

சுருக்கமாக, அல்லாஹ்வின் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. அவை அல்லாஹ்வின் நெருக்கத்தை நமக்கு வழங்குகிறது. ஆனால் இந்த உலகம் எப்படிப்பட்டது என்றால் நாம் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் சய்த்தானை எதிரிட வேண்டியது வருகிறது. அவன் பல சந்தர்ப்பங்களில் நமது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த விரும்புகின்றான். அல்லாஹ் உண்மையான நம்பிக்கையாளரிடமும் ரஹ்மானின் அடியார்களிடமும் செய்ய வேண்டும் என்று கூறிய விசயங்களை விட்டும் நம்மை அவன் தொலைவில் கொண்டு செல்ல விரும்புகின்றான்.

எனவே நாம் நினைவில் கொள்ள வேண்டும். சய்த்தான் தனது பணியைச் செய்து கொண்டே இருப்பான். அவன் ஆதம் படைக்கப்பட்ட தருணத்திலிருந்தே அல்லாஹ்விடம் நீ எனக்கு கால அவகாசம் வழங்குவாயாக! எவருக்கு நான் ஸஜ்தா செய்ய வேண்டும் என்று நீ கட்டளையிட்டாயோ அவரை நான் நேர்வழியிலிருந்து வழிதவறச் செய்ய வேண்டும் என்று கூறி அல்லாஹ்விடம் கால அவகாசம் வழங்கும்படி கேட்டான். பிறகு இவ்வாறும் அவன் கூறினான். பெரும்பாலாரை நான் எந்த வழிமுறை மூலம் வழிதவறச் செய்வேன் என்றால் அவர்கள் எனக்குப் பின்னால் வந்து விடுவார்கள். ரஹ்மானின் அடியார்கள் குறைவாக இருப்பார்கள். சய்த்தானின் அடியார்கள் அதிகமாக இருப்பார்கள். எவர் உன்னைப் பின்பற்றிச் செல்வாரோ அவரை நான் நரகில் போடுவேன் என்று அல்லாஹ்வும் கூறினான்.

இந்த காலத்தில் நான் உதாரணமாக கூறியதிலிருந்த பல விசயங்கள் அல்லாஹ்வின் வெறுப்பின் பக்கம் கொண்டு செல்லக் கூடியவையாக இருக்கின்றன. அவற்றை சரியாகப் பயன்படுத்துவது தீமை ஆகாது. ஆனால் அவற்றை தவறாகப் பயன்படுத்துவது தீமைகளைப் பரப்புவதற்கும், அசிங்கத்தைப் பரப்புவதற்கும், பாவங்களைப் பரப்புவதற்கும் மிகப்பெரிய வழியாக ஆகியிருக்கின்றது. ஆனால் இதே பொருள்கள் நன்மைகளைப் பரப்புவதற்குரிய வழியாகவும் இருக்கின்றது. டி.வி. இருக்கின்றது. பல தகவல்களையும் அறிவுப்பூர்வமான விசயங்களையும் அது நமக்கு தருகின்றது. ஆனால் வெட்கங்கெட்ட செயல்களும் இதன் காரணமாக பொதுவானதாக ஆகி விட்டது. இந்தக் காலத்தில்

டி.வி –ஐச் சிறந்த முறையில் அஹ்மதிகளாகிய நாம் தான் பயன்படுத்துகின்றோம். அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் இதனை சிறந்த முறையில் பயன்படுத்துகிறது. நான் மாநாட்டு நாட்களிலும் இதுபற்றி கவனமூட்டினேன். அதனால் சில மக்களிடம் நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் முதலில் M.T.A. பார்க்காமல் இருந்தோம். இப்போது நீங்கள் கூறியதால் எங்களுக்கு கவனமூட்டியதால் நாங்கள் M.T.A. பார்க்க ஆரம்பித்திருக்கின்றோம் என்று கூறியுள்ளனர். இதற்கு முன் நாங்கள் ஏன் இதனை பார்க்காமல் இருந்தோம். இதோடு நாங்கள் ஏன் இணையாமல் இருந்தோம் என்று வருத்தப்படுகின்றனர். இதைப் பார்க்க ஆரம்பித்து ஒருவாரம் அல்லது பத்து நாட்கள் ஆனதுமே எங்களது அறிவு மற்றும் ஆன்மீகத்தின் தரம் அதிகரித்துள்ளது என்று சிலர் கூறியுள்ளனர். ஜமாஅத் பற்றி எங்களுக்கு சரியாகத் தெரிந்து விட்டது என்கின்றனர்.

எனவே மீண்டும் நான் நினைவூட்டுகின்றேன். இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள். உங்களது வீடுகளை இந்த அருட்கொடையிலிருந்தும் பலன் பெறுபவையாக ஆக்கிக் கொள்ளுங்கள். இதனை அல்லாஹ் நமது தர்பிய்யத்திற்காகவும் நமது அறிவையும் ஆன்மீகத்தையும் அதிகரிப்பதற்காகவும் நமக்கு வழங்கியுள்ளான். இதன் மூலம் நமது சந்ததிகள் அஹ்மதிய்யத்தில் நிலைத்திருக்கக்கூடியதாக இருக்க வேண்டும். எனவே நாம் நம்மை M.T.A. –வுடன் இணைத்து வைக்க முயற்சி செய்ய வேண்டும். இப்போது குத்பாக்களைத் தவிர வேறு பல ‘நேரலை நிகழ்ச்சிகள்’ வருகின்றன. அவை எங்கு மார்க்க, ஆன்மீக முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கின்றதோ அங்கு அறிவின் முன்னேற்றத்திற்கும் அது காரணமாக இருக்கின்றது. இதற்காக இலட்சக்கணக்கான டாலர்களை ஜமாஅத் ஒவ்வொரு வருடமும் செலவு செய்கிறது. ஜமாஅத்திலுள்ள நபர்களின் தர்பிய்யத்தைக் கருத்தில் கொண்டு இதை செய்கிறது. ஜமாஅத்திலுள்ள நபர்கள் இதிலிருந்தும் முழுமையாகப் பயன்பெறாமல் இருந்தால் அவர்கள் தாங்களாகவே தங்களை அருள்களிலிருந்து விலக்கிக் கொள்கின்றனர். அந்நியர்கள் இப்போது இதிலிருந்து முழுமையாகப் பலன் பெறுகின்றனர். ஜமாஅத்தின் உண்மை அவர்களுக்கு தெளிவாகத் தெரிகிறது. அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் இஸ்லாத்தின் உண்மை பற்றி அவர்களுக்கு தெரிந்திருக்கின்றது. இதைப் பற்றிய சரியான அறிவு அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. எனவே இங்கு வசிக்கக்கூடிய அஹ்மதிகளும் முழு உலகிலுள்ள அஹ்மதிகளும் M.T.A. –விலிருந்து முழுமையாகப் பயனடைய வேண்டும். M.T.A. வின் இன்னொரு பரக்கத்தும் இருக்கின்றது. அது ஜமாஅத்தை கிலாஃபத்துடன் இணைப்பதற்கான மிகப்பெரிய வழியாக இருக்கின்றது.

எனவே, இதிலிருந்தும் பயன்பெற வேண்டும். அல்லாஹ் மனிதனுக்கு அறிவை வழங்கியுள்ளான். மனிதன் அந்த அறிவைப் பயன்படுத்தி தனது எளிதான நிலைக்கான வழிவகைகளைச் செய்து கொண்டான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

إِنَّا جَعَلْنَا مَا عَلَى الْأَرْضِ زِينَةً لَّهَا لِنَبْلُوَهُمْ أَيُّهُمْ أَحْسَنُ عَمَلًا

*நிச்சயமாக நாம் அவர்களுள் எவர் சிறந்த முறையில் செயலாற்றுகின்றார் என்பதைச் சோதிப்பதற்காக பூமியில் உள்ளவற்றை நாம் அதற்கு அலங்காரமாக்கியுள்ளோம். (18:8)*

இங்கு பூமியிலுள்ள ஒவ்வொரு பொருளையும் அலங்காரமாக்கியுள்ளதாகக் கூறி அதன் முக்கியத்துவத்தை அல்லாஹ் எடுத்துக் கூறியுள்ளான். நாம் கண்டுபிடிக்கின்ற ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பையும் அலங்காரம் என்று கூறி அதன் முக்கியத்துவத்தை அல்லாஹ் விளக்கியுள்ளான். ஆனால் அல்லாஹ் கூறுகின்றான். ஒவ்வொரு பொருளுக்கும் உள்ள முக்கியத்துவமும் அதன் இடத்தில் இருக்கின்றது. ஆனால் சிறந்த செயல்கள் மூலம் அவற்றுடன் தொடர்பு வைப்பதன் மூலமே பலன் கிடைக்கும்.

எனவே இந்த கண்டுபிடிப்புகளிலிருந்து பலன் பெறுங்கள். ஆனால் சிறந்த செயல்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று நமக்கு போதிக்கப்பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்புகளின் அழகு இவற்றின் மூலம் அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப செயல்படும் போதுதான் வெளிப்படும். இவற்றிலிருந்து நாம் பலன்பெற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும். அவற்றின் மூலமாக குழப்பம் உருவாகக் கூடாது. சிறந்த செயல்கள் இல்லையென்றால் இந்த பொருள்கள் சோதனையாக ஆகிவிடும். இதுபற்றி முதலிலேயே உதாரணங்களைக் கூறி விளக்கியுள்ளேன். இந்த M.T.A. தொலைக்காட்சி உள்ளது. அதுவும் பலனையும் தருகின்றது. சிலருக்கு சோதனையாகவும் ஆகியிருக்கின்றது. பல வீடுகளும் இன்டர்நெட் மற்றும் சாட்டிங் காரணமாக அழிந்து கொண்டிருக்கின்றன. குழந்தைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனென்றால் சுதந்திரம் என்ற பெயரில் அல்லாஹ் வழங்கியுள்ள பொருள்களிலிருந்து தகாத பலனை இவர்கள் பெறுகின்றனர். உண்மையான இறை அடியாருக்கு எப்போதும் சிறந்த கூற்றையும் சிறந்த செயலையும் கண்முன் நிறுத்தி செயல்படும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. பணி செய்வதன் நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாக இருக்க வேண்டும்.

திருக்குர்ஆனின் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டளையின் விளக்கத்தையும் இங்கு எடுத்துக்கூற முடியாது. ஒரு விசயத்தின் பக்கம் நான் கவனமூட்ட விரும்புகின்றேன். இதைப் பற்றி நான் ஆரம்பத்திலும் சில விசயங்களைக் கூறியுள்ளேன். அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான். சிறந்த கூற்று தொடர்பாக அல்லாஹ்வின் இந்த கட்டளையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வுக்கு இது மிகவும் விருப்பமான விசயமாகும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَمَنْ أَحْسَنُ قَوْلًا مِّمَّن دَعَا إِلَى اللَّهِ وَعَمِلَ صَالِحًا وَقَالَ إِنَّنِي مِنَ الْمُسْلِمِينَ

***அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்து தனது நம்பிக்கைக்கேற்ப செயல்பட்டு நான் கட்டுப்பட்டு நடப்பவனைச் சார்ந்தவனாவேன் என்று கூறுபவரின் கூற்றை விட வேறு எவரது கூற்று நல்லதாக இருக்க முடியும்? 41:34***

இந்த அழகிய போதனையையும் கூற்றையும் ஓர் உண்மையான அடியாரிடம் நாம் எதிர்பார்க்கலாம். அவ்வாறு எதிர்பார்க்கவும் வேண்டும். நான் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தில் يَقُولُوا الَّتِي هِيَ أَحْسَنُ ***மிகவும் சிறந்த கூற்றைக் கூறுங்கள்*** என்று கூறப்பட்டுள்ளது. மிகச்சிறந்த விசயங்கள் என்பது அல்லாஹ் செய்யும்படி கூறியுள்ள விசயங்களாகும். ஆனால் இந்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். இந்த எல்லா நல்ல விசயங்களும் ஒன்றுசேர்ந்து இந்த ஒரு விசயத்தில் வந்து விடுகின்றது. அதுதான் இந்த வசனத்தின் சுருக்கமாகும். அதாவது இறைவனின் பக்கம் அழைப்பது தான் மிகச் சிறந்த கூற்றாகும். இறைவன் பக்கம் அழைப்பவர் தன்னைப் பற்றியும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எதன் பக்கம் அவர் மற்றவரை அழைக்கின்றாரோ அந்த விசயங்களால் தான் எந்த அளவு செயல்படுகின்றார் என்று பார்க்க வேண்டும். நான் ஆரம்பத்திலும் கூறினேன். நீங்கள் செய்யாததை சொல்லாதீர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஏனென்றால் இது பாவமாகும். நான் விளக்கமாக கூறியிருப்பது போன்றே அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர் தனது சொல்லையும் செயலையும் ஒன்றுபோல் வைத்திருக்க வேண்டும்.

தன்னை முழுமையான முறையில் அல்லாஹ்வின் விருப்பத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும். இதுதான் இஸ்லாமிய போதனையின் உயர் தரமான உதாரணமாகும். அல்லாஹ்வின் பக்கம் அழையுங்கள். இதை விட பெரிய சிறந்த கூற்று வேறு எதுவுமில்லை என்று அது கூறுகின்றது. இது அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான விசயமாகும். ஆனால் அழைப்பதற்கு உங்களது செயல்களையும் அமலே ஸாலிஹா – பொருத்தமான நற்செயல்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அமலே ஸாலிஹ் என்பது இறைவனது வழிகாட்டலுக்கேற்ப செய்யப்படும் செயல்களாகும். அது நன்மைகளைப் பரப்பக்கூடியதாகவும் காலத்தின் தேவைக்கேற்பவும் இருக்கும். அது சீர்திருத்தம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும். இங்கு அமலே ஸாலிஹிற்கான ஓர் உதாரணத்தைக் கூறுகின்றேன். இதில் நேரடியாக உங்களுக்கு தொடர்பில்லை என்றாலும் உங்களுக்கு விளக்கிக் கூறுவதற்கு இது அவசியமானதாகும்.

நான் முதலில் கூறி வந்துள்ளேன். மன்னிப்பதும் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வதும் ஒரு நன்மையான விசயமாகும். மன்னிக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆனால் திருடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ள ஒருவரை மன்னிப்பது அல்லது கொலை செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ள கொலையாளியை மன்னிப்பது சிறந்த செயலல்ல. அது அமலே ஸாலிஹும் ஆகாது. இங்கு அமலே ஸாலிஹ் எது என்றால் சமுதாயத்தை அதற்கு இழப்பு ஏற்படுவதிலிருந்தும் காப்பாற்றுவதற்காகவும், அதனை தீமைகளிலிருந்து தடுப்பதற்காகவும் மீண்டும் மீண்டும் இந்த தவறுகளைத் தெரிந்து கொண்டே செய்யும் நபருக்கு தண்டனை வழங்க வேண்டும். இவ்வாறான பல உதாரணங்கள் இருக்கின்றன.

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைச் செய்பவரை விட சிறந்தவர் வேறு யாரும் இல்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். இது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான பணியாகும். அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது மட்டும் போதாது என்பதையும் அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக அழைப்பவரது ஒவ்வொரு செயலும் அமலே ஸாலிஹாக – பொருத்தமான நற்செயலாக இருக்க வேண்டும். ஒருபுறம் மனிதன் நான் இறைவனின் ஒரு சிறந்த அடியாராக இருக்கின்றேன். எனவே இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பது எனது கடமையாகும் என்று கூறிவிட்டு மறுபுறம் அப்படிப்பட்ட மனிதர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு உரிய உரிமைகளைச் செலுத்தாமல் இருந்தால் அல்லது பெண் தனது வீட்டைக் கண்காணிக்காமலும், தனது குழந்தைகளின் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்தாமலும் இருந்தால் அல்லது வேறு இஸ்லாமிய கட்டளைகளுக்கேற்ப செயல்படாமல் இருந்தால், பெண்களின் ஆடை தொடர்பாக அவளது வெட்க உணர்வு, புனிதத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இஸ்லாம் கூறியுள்ள கட்டளைகளைப் பற்றி கருத்தில் கொள்ளாமல் இருந்து தப்லீகிற்காக மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டால் பிறகு அப்படிப்பட்ட நபரது தப்லீக் மூலம்

ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு பிறகு திருக்குர்ஆனை படித்தால் பிறகு அவர் எனக்கு நீங்கள் தப்லீக் செய்தீர்கள். ஆனால் குர்ஆனில் வெட்கம் மற்றும் பர்தா பற்றியும் கட்டளையிட்டுள்ளது. நீங்கள் அதற்கேற்ப செயல்படவில்லை என்று கூறி விடுவார். இவ்வாறு வேறு பல தீமைகளும் உள்ளன. பொய் கூறுவது, புறம் பேசுவது போன்ற தீமைகள் உள்ளன. பல தவறான செயல்கள் உள்ளன. ஒருவர் நன்றாக தப்லீக் செய்கின்றார் என்பதற்காக இத்தகைய தீமைகள், தவறுகள் மன்னிக்கப்படாது.

அல்லாஹ் கூறுகின்றான்: சிறந்த கூற்றைக் கூறுபவர் அமலே ஸாலிஹ் அதாவது பொருத்தமான நற்செயல்களைச் செய்பவராகவும் இருப்பார். நான் கட்டுப்பட்டு நடப்பவனாவேன். நான் முழுமையாகக் கீழ்படிந்து நடப்பவனாவேன் என்பதை வெளிப்படுத்தக் கூடியவராகவும் இருப்பார். **எல்லா கட்டளைகளையும் கேட்டோம்; கட்டுப்பட்டோம் என்ற முழக்கத்துடன் செய்பவராக இருக்க வேண்டும். இதுவே ஒரு உண்மையான முஸ்லிமின் அடையாளமாகும்.**

இதன் அடிப்படையில் நான் ஆஸ்திரேலியா ஜமாஅத்திற்கும் கவனமூட்ட விரும்புகின்றேன். இந்த விசயத்தை நினைவில் கொள்ளுங்கள. அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான விசயமாகும். ஆனால் அத்துடன் இந்தப் பணியைச் செய்வதற்காக நமது செயல்களை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்வது அவசியமானதாகும். முழுமையான கட்டுப்படுதல் மற்றும் கீழ்படிதல் ஆகியவற்றின் முன்மாதிரியைக் காட்ட வேண்டியது அவசியமானதாகும். இந்த நாட்டின் ஜனத்தொகை ஏறக்குறைய 23 மில்லியன் ஆகும். ஆனால் இதன் பரப்பளவு மிகவும் விரிவானதாகும். பெருங்கண்டமாகவும் இது இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் ஜனத்தொகை இங்கு அதிகமாக இல்லை. சில நகரங்களைக் கொண்ட குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாக இந்த நாடு இருக்கின்றது. சில நகரங்களுக்கு செல்வதற்கு அதன் தூரம் மிக அதிகமாக இருக்கின்றது. ஆனால் நான் மாநாட்டில் கூறியது போன்றே லஜ்னா, குத்தாம், அன்ஸார் ஆகியோரும் ஜமாஅத் அமைப்பும் தப்லீக் பணிகளின் பக்கம் முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டும். நமது பணி தூதுச் செய்தியை எட்ட வைப்பதாகும். விளைவுகளை உருவாக்குவது அல்லாஹ்வின் பணியாகும். நாம் நமத பணியைச் செய்வதுடன் அல்லாஹ்விடம் துஆவும் செய்தால் இன்சா அல்லாஹ் விளைவுகளும் உருவாகும். எங்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி தெரியாது என்று எவரும் கூறிவிடக் கூடாது.

தற்செயலாக நான் பெருநாளன்று M.T.A. –வில் இங்குள்ள ஸ்டூடியோவிலிருந்து வரும் நிகழ்ச்சியைப் பார்த்தேன். அப்போது நமது துணை அமீரான காலித் ஸய்புல்லாஹ் சாஹிப் அவர்கள் 1989ம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பெருநாள் தொழுகையையும் ஜுமுஆ தொழுகையையும் இங்கு தொழ வைத்தார்கள் என்று கூறியதைக் கேட்டேன். அப்போது பள்ளிவாசல் மிகப் பெரியதாகத் தெரிந்தது. அதிகபட்சம் 250 பேர் அப்போது இங்கு இருந்தனர். ஆனால் இப்போது அவர்களது எண்ணத்திற்கேற்ப 2500 பேர் இருக்கின்றார்கள். அப்போது உடனடியாக நானும் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி இறைவனுக்கு நன்றி கூறினேன். நமது வழிமுறையும் அவ்வாறே இருக்க வேண்டும். எண்ணிக்கையை அதிகப்படுத்துவது இருக்க வேண்டும். ஆனால் இதைப் பற்றி நான் சிந்தித்த போது அத்துடன் எனக்கு கவலையும் ஏற்பட்டது. ஏறக்குறைய 24 ஆண்டுகள் கடந்த பிறகும் இப்போதுள்ள இந்த எண்ணிக்கைக் கூட அதிகபட்சம் பாகிஸ்தான் மற்றும் ஃபிஜி தீவுகளிலிருந்து வந்திருப்பவர்களின் எண்ணிக்கையேயாகும். தப்லீக் மூலம் இரண்டு அல்லது மூன்று பேர் அஹ்மதிகளாவார்கள். அவர்களையும் பாதுகாக்க முடியவில்லை. 24 ஆண்டுகளில் இங்குள்ள உள்ளூர்வாசிகளில் 24 பேரைக் கூட அஹ்மதிகளாக ஆக்க முடியவில்லை. அதாவது ஒரு வருடத்தில் ஒருவர் கூட அஹ்மதி ஆகவில்லை. இங்குள்ள எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு பாகிஸ்தான் மற்றும் ஃபிஜி தீவுகளிலுள்ள எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவின் காரணமாக ஏற்பட்டதாகும். ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் முயற்சியால் இது நடக்கவில்லை. எனவே உண்மையான நிலைமையில் இருந்து நாம் நமது கண்களை மூடிக் கொண்டு இருந்துவிடக் கூடாது. இவற்றை எப்போதும் நம் கண்முன் நிறுத்த வேண்டும். இது கவலை தரும் விசயமாகும். குறைந்தபட்சம் எனக்கு இது மிகவும் கவலை தரக்கூடிய விசயமாகும்.

இங்குள்ள உள்ளூர்வாசிகளைத் தவிர அதாவது தங்களை ஆஸ்திரேலியன் என்று கூறிக்கொள்கின்ற இந்த நாட்டில் பிறந்தவர்களைத் தவிர இங்கு அரபு நாட்டிலிருந்தும் மற்ற சமுதாயங்களிலிருந்தும் மக்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு தப்லீக் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. முறையாகத் திட்டமிட்டு தப்லீக் பணிகளைச் செய்ய வேண்டும். ஆஸ்திரேலியன் மக்களிடம் விசயங்களைக் கேட்கும் தன்மையும் தைரியமும் இருக்கின்றது. விசயங்களைப் பேச விரும்புகின்றனர். தொடர்புகளை ஏற்படுத்தி இவர்களைச் சென்றடைந்தால்

கொஞ்சத்திற்கு கொஞ்சமாவது உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொள்கின்ற நல்லியல்புள்ள மக்கள் இவர்களில் கண்டிப்பாக இருப்பார்கள். ஒவ்வொரு துறையைச் சேர்ந்த மக்களுக்கும் இஸ்லாத்தின் அமைதி, அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றின் தூதுச் செய்தியை எட்ட வைப்பது நமது பணியாகும்.

மெல்போர்னில் சில மக்கள் என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் அஹ்மதிகளை அறிந்திருந்தனர். ஆனால் அவர்களில் பெரும்பாலாருக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பற்றி தெரியவில்லை. அவர்கள் அஹ்மதிகளை ஒரு சிறந்த அமைப்பாகக் கருதுகின்றார்கள். எவர்களுடன் அஹ்மதிகளுக்கு நட்பு இருக்கின்றதோ அவர்கள் அஹ்மதிகள் நல்லொழுக்கம் உடையவர்கள் என்று கருதுகின்றனர். ஆனால் இஸ்லாத்தின் அடிப்படையான தூதுச் செய்தி அவர்களைச் சென்றடையவில்லை. எனவே இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

ஒரு தூய உள்ளம் கொண்ட சகோதரருக்கு மாநாட்டின் போது பரிசு வழங்கப்பட்டது. அவர் மாற்றுத்திறனாளியாக இருந்தும் கூட இஸ்லாத்தின் அமைதியின் தூதுச் செய்தி அடங்கியுள்ள 20,000 பிரசுரங்களை விநியோகம் செய்துள்ளார். முழு நாட்டிலும் இப்போது ஏறக்குறைய 4000 பேர் அஹ்மதிகள் இருப்பதாகக் கூறுகின்றார்கள். ஆனால் எனது கருத்திற்கேற்ப இதைவிட அதிக எண்ணிக்கையில் அஹ்மதிகள் இருக்கின்றனர். 5000 பேர் நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் இதில் பாதி அல்லது 2000 பேர் பிரசுரம் விநியோகம் செய்தாலும் பத்து மில்லியன் பிரசுரங்கள் விநியோகம் செய்திருக்கலாம். ஆஸ்திரேலியாவின் ஜனத்தொகையில் ஏறக்குறைய சரிபாதிக்கு இந்த அமைதியின் தூதுச் செய்தி சென்றடைந்திருக்கும். இதனை ஒரு வருடத்தில் அவர்கள் செய்து முடித்திருந்தால் தப்லீகிற்காக அடுத்த பிரசுரம் தயாராகி இருக்கும். இதில் நான்கில் ஒரு பகுதி பிரசுரங்களை அல்லது பத்தில் ஒரு பகுதி என்ற விகிதத்தில் பிரசுரங்களை நாம் விநியோகம் செய்திருந்தால் கூட மீடியாவிற்கு இதன் பக்கம் கவனம் ஏற்பட்டிருக்கும். பிறகு பத்திரிகைகளே இந்த தூதுச் செய்தியைக் கொண்டு சென்றிருக்கும். பல நாடுகளிலும் இப்படித்தான் நடந்திருக்கிறது. அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இவ்வாறு நடந்திருக்கின்றது.

ஆக மற்ற பணிகள் அவர்கள் மூலமாக நடந்து விடும். மீடியாவுடன் நல்ல தொடர்பு இருப்பதை நான் பார்க்கின்றேன். ஆனால் இதனை இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை பரப்புவதற்காக பயன்படுத்த வேண்டும். இங்கு முதிய வயதிலுள்ள பலரும் பல நாடுகளிலிருந்தும் வந்துள்ளனர். இங்கும் அவர்களுக்கு நான் இதைத்தான் கூறுவேன். இவர்களுக்கு எந்தப் பணியும் இல்லை. வீட்டில் ஓய்வாக அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் தங்களது நேரத்தை அர்ப்பணிக்க வேண்டும். பிரசுரம் போன்றவற்றை அவர்கள் விநியோகம் செய்ய வேண்டும். ஜமாஅத்தின் நூல்களைக் கொண்டு செல்லுங்கள். அவற்றை விநியோகம் செய்து தப்லீக் செய்யுங்கள்.

நான் கூறிய இந்த புள்ளி விபரங்கள் உங்களுக்கு உணர்வை ஏற்படுத்துவதற்கே ஆகும். இந்த பிரசுரங்களை அச்சடிப்பதற்கான செலவை ஏற்றுக் கொள்ளும் வகையில் ஆஸ்திரேலிய ஜமாஅத்திற்கு சக்தி இல்லை என்பதை நான் அறிவேன். 5 அல்லது 10 சென்ஸில் ஒரு நூல் அச்சடிக்கப்பட்டாலும் கூட 10 மில்லியன் மக்களுக்கு குறைந்தபட்சம் 5 இலட்சம் டாலர்கள் தேவைப்படும். மொத்தமாக அச்சிடும் போது இவ்வளவு தான் செலவாகும். ஆனால் எவ்வாறிருப்பினும் இலட்சக்கணக்கில் இதை வெளியிட வேண்டுமென்றாலும் அவ்வாறு செய்யலாம். அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. இதனால் பெரும் பணிகளைச் செய்ய முடியும். பிறகு அச்சகத்துடன் தொடர்பு இருந்தால் அதுவே மேலும் இந்தப் பணிகளைச் செய்து விடும். இரத்ததானம் போன்ற திட்டங்களையும் நீங்கள் செயல்படுத்தியுள்ளீர்கள். ஆனால் இதனை இஸ்லாத்தின் பெயரோடு தொடர்புபடுத்திச் செய்யுங்கள். அதன் மூலம் இஸ்லாத்தின் அமைதியின் தூதுச் செய்தி உலகிற்கு தெளிவாகத் தெரிந்து விட வேண்டும். இன்சா அல்லாஹ். இதனால் கவனம் ஏற்பட்டு மேலும் பல வழிகள் திறந்து விடும். இந்தப் பணியைச் செய்வதற்கு மிகவும் பெரிதாகத் தேவைப்படுவது அமலே ஸாலிஹ் என்னும் பொருத்தமான நற்செயல்களாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். நன்மைகளில் முன்னேறுபவர்களாக நாம் இருக்க வேண்டும். இறைவன் மீது முழுமையான நம்பிக்கையும் இருக்க வேண்டும். துஆவின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். அல்லாஹ் நம்மை அமலே ஸாலிஹ் செய்கின்ற, நன்மைகளில் மற்றும் கீழ்படிந்து நடப்பதில் முன்னேறிச் செல்கின்ற அடியார்களைச் சார்ந்தவர்களாக ஆக்குவானாக! மேலும் அவனது திருப்திக்கேற்ப பணி செய்பவர்களாக நாம் இருக்க வேண்டும். இப்பணிகள் மூலம் நல்ல விளைவுகளையும் அல்லாஹ் ஏற்படுத்துவானாக! நமது எண்ணிக்கை அதிகமாவது இங்குள்ள உள்ளூர்வாசிகள் மூலமாக ஏற்பட வேண்டும். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். இது மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதி அமத்துல் மதீன் சாஹிபா உடையதாகும். இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின்

மகளாவார்கள். மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூது அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்களின் மனைவியாவார்கள். அக்டோபர் 14ம் தேதி இரவு ஏறக்குறைய 12 மணியளவில் ரப்வாவில் இவர்கள் வஃபாத் ஆகியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நேற்றைக்கு முந்தைய நாளான பெருநாளன்று இவர்களது நல்லடக்கம் நடந்தது.

இவர்கள் காதியானில் 1936 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி பிறந்தார்கள். காதியானில் தாருல் மஸீஹில் இவர்கள் பிறந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் இவர்களுக்காக அதிகமாக துஆ செய்துள்ளார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் செய்யிதா மர்யம் ஸித்தீகா சாஹிபா அவர்களின் மகளாவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் இந்த மனைவி மூலம் இவர்கள் மட்டுமே பிறந்தார்கள். இவர்கள் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களின் மகள்வழிப் பேத்தி ஆவார்கள். ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் மாமா ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது மகளுக்காக சில கவிதைகளையும் எழுதியுள்ளார்கள். அது கலாமே மஹ்மூதில் அத்ஃபாலுல் அஹ்மதிய்யா கே தரானே என்ற பெயரில் வெளி வந்துள்ளது.

இந்தக் கவிதையின் ஒரு வரி இதுவாகும்.

*இரவும் பகலும் எனது ஓசை இதுவேயாகும்.*
*இந்த உலகை உருவாக்கிய ஓர் இறைவன் இருக்கின்றான்.*

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சந்ததிகளில் குறிப்பாக மகள்கள் அனைவருக்குமே அல்லாஹ்வுடன் நெருக்கமான தொடர்பு இருந்ததை நான் பார்த்துள்ளேன். அவர்கள் முறையாக தொழக் கூடியவர்களாக இருந்ததுடன் மட்டுமல்லாமல் மிகவும் கவனத்துடனும் உருக்கத்துடனும் நீண்ட தொழுகையை தொழக்கூடியவர்களாக இருந்தனர். மதிப்பிற்குரிய மீர் மஹ்மூது அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்கள் முபல்லிக்காக இருந்திருக்கின்றார்கள். அவர்கள் தமது வாழ்க்கையை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்தவர்கள் ஆவார்கள். ஸ்பெயினிலும் அமெரிக்காவிலும் இவர்கள் முபல்லிக்காக இருந்துள்ளார்கள். இவர்களுக்கு இவருடன் சேர்ந்து இருப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. முபல்லிக்கின் மனைவியாக இருப்பதன் உரிமையை அவர்கள் செலுத்தினார்கள். ஸ்பெயினில் மஸ்ஜித் பசாரத் கட்டப்பட்ட போதும் இவர்கள் அங்கு தான் இருந்தனர். அதற்கான தயாரிப்புப் பணிகளையும் உணவு சமைக்கும் பணிகளையும் இவர்கள் செய்து வந்தார்கள். அப்போது அங்கு இதற்கான முறையான ஏற்பாடு இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் இதைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். அப்போது அவர்கள் கூறினார்கள். அந்த சமயத்தில் இரவு 3.00 மணிக்கு இவர்கள் தமது பணியை முடித்து விட்டு தூங்கச் செல்லும் போது அல்லாஹ் இன்று இப்போது தூங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளான் என்று கூறி மகிழ்ச்சி அடைவார்கள். இரவு பகலாக மிக நீண்ட நேரம் இவர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் அருளால் மஸ்ஜிது பசாரத்தின் துவக்க நிகழ்ச்சி மிகவும் வெற்றிகரமாக நடந்தது. விருந்தினர்களுக்கும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கும் இவர்களே தங்களது கண்காணிப்பின் கீழ் உணவு சமைத்தார்கள். ஏனென்றால் அப்போது முறையாக உணவகத்திற்கான ஏற்பாடு இல்லாமல் இருந்தது. அமெரிக்காவில் கலிஃபோர்னியாவில் நீண்ட காலம் இவர்கள் இருந்துள்ளார்கள். அங்கு ஜமாஅத்தின் நிலை அப்போது எப்படி இருந்தது என்றால் அங்கு வாஷிங் மிஷின் போன்ற எந்தப் பொருள்களுமே இருக்கவில்லை. துணிகளைத் துவைப்பதற்கும் வீட்டின் பிற பணிகளைச் செய்வதற்கும் உதவியாக ஒரு உதவியாளருக்கான ஆஃபர் அவர்களுக்கு வந்த போது அதை ஏற்க அவர்கள் மறுத்து விட்டார்கள். வீட்டுப் பணிகளைத் தாமே செய்யும் பழக்கம் இருந்தது. பாகிஸ்தானில் தலைமையக லஜ்னா அமைப்பிலும் இவர்கள் செயலாளராக பணியாற்றி உள்ளார்கள். பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்கள். கிலாஃபத்துடன் மிகவும் ஆழ்ந்த பற்றுமிக்க தொடர்பிருந்தது. அவர் என்னுடைய சிற்றன்னை ஆவார். ஆனால் கிலாஃபத் பதவிக்கு நான் வந்த பிறகு கிலாஃபத் மீதுள்ள கண்ணியம், அன்பு, நேசம் ஆகியவற்றின் தொடர்பில் அவர்கள் மிகவும் முன்னேறிச் சென்று விட்டார்கள். ஆரம்பத்தில் முதன்முறையாக இங்கு இலண்டன் வந்த போது நான் அவர்களிடம் தெளிவாக எதையும் பேச முடியாது என்று ஒருவரிடம் அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த வருடம் U.K. ஆண்டு மாநாட்டிற்கு வந்த சமயத்தில் கூட அவர்கள் நோயுற்றிருந்தார்கள். அந்நிலையில் கூட அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள இலண்டன் வந்திருந்தார்கள். அப்போது இவர்களுடன் எனக்கு சந்திப்பு ஏற்பட்டது. இவர்களுக்கு 4 மகன்களும் ஒரு

மகளும் உள்ளனர். மகன்களில் இருவர் வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தவர்கள் ஆவார்கள். அவர்களில் ஒருவரான டாக்டர் குலாம் அஹ்மது ஃபாரூக் சாஹிப் அவர்கள் அமெரிக்காவில் கணிப்பொறி அறிவியலில் Ph.d. செய்துள்ளார்கள். இன்றைய நாட்களில் அவர்கள் ரப்வாவில் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகத்தில் பணியாற்றி வருகின்றார்கள். இரண்டாவது மகன் வாழ்க்கையை அர்ப்பணித்த பிறகு அமெரிக்காவில் இருந்து வந்தார்கள். பிறகு தனது வேலையை விட்டு விட்டு இலண்டன் வந்து விட்டார்கள். மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்கள் இங்கு என்னுடன் வந்திருக்கின்றார்கள். தனது தாயாரின் வஃபாத்தின் காரணமாக சில நாட்களுக்கு முன் அவர்கள் ரப்வா சென்று விட்டார்கள். இந்த இரண்டு சகோதரர்களும் மிகுந்த பற்றுடன் தொண்டாற்றக்கூடியவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ் இனி வருங்காலத்திலும் இவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக!

இவர்களது ஒரு மகள் ஹாலந்தில் இருக்கின்றார்கள். ஒரு மகன் டாக்டராக துபாயில் இருக்கின்றார். இன்னொரு மகன் அமெரிக்காவில் இருக்கின்றார். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் ஆழ்ந்த பற்றுமிக்க தொடர்பை வைத்திருப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஹஸ்ரத் மீர் மஹ்மூது அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்களும் இப்போதும் தனிமையாக இருப்பதை மிகுதியாக உணர்கின்றார்கள். அல்லாஹ் தனது அருளால் அவர்களுக்கு நிம்மதியான நிலையை வழங்குவானாக! இதனால் ஏற்பட்டுள்ள குறைவை அல்லாஹ் தான் தனது அருளால் நிறைவு செய்ய முடியும். நீண்ட நாட்களாக உடனிருந்தவர்களுக்கு எவ்வாறிருப்பினும் இத்தகைய உணர்வுகள் இருக்கத்தான் செய்யும். அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக! தொழுகைக்குப் பிறகு இவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at Melbourne, Australia

on **18.10.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456